

# போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டம் (NHG) பற்றிய ஆய்வறிக்கை- வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவு

**Assisting Communities in Creating Environmental and Nutritional Development (ACCEND) Project)**

In collaboration with
Government of Sri Lanka

Project funded by
European Union
යුරෝපා සංගමය ஐரோப்பிய ஒன்றியம்

EU-Sri Lanka
සංවර්ධන සහයෝගිතාව
அபிவிருத்திக்கான ஒன்றிணைவு
Development Cooperation

Implemented by
ADRA
OXFAM

© ADRA இலங்கை
முதல் பக்கப் பட வரைவு: செனெல் ஹெட்டியாராச்சி
ஜீலை 2021
நூலாசிரியர் (சுதந்திர ஆய்வாளர்): என். எம். கே. சி. பிரேமரத்ன
பதிப்பாசிரியர்கள்: Dr.கயலி எஸ்., சபீர் மொஹமட் மற்றும் ஜோன் ஜோயசீ இருதயராஜா
பின்வரும் சக ஊழியர்களின் கருத்து மற்றும் உள்ளீடுகளுக்கு ஆசிரியர் நன்றி தெரிவிக்கின்றார் –
மத்தியு விட்டி, விசாகா விக்கிரமாராச்சி, புளோரன்சியா அமரசிங்க, திலக் கருணாரத்ன,
ரசிக பெர்னாண்டோ மற்றும் செனெல் ஹெட்டியாராச்சி
இந்த அறிக்கையில் ஏதேனும் வழுக்கள் இருப்பின் அவை ஆசிரியர் மற்றும் பதிப்பாசிரியரின் முழுப் பொறுப்புக்குரியதாக இருக்கும்.
இந்த வெளியீட்டிலுள்ள தரவுகள் அனைத்தும் பிரசுரத்தின் போது வழுவற்றவையாகும்.
இந்த அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்கள் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியம், ஒக்ஸ்பாம் இலங்கை மற்றும் அட்ரா நிறுவனங்களின் உத்தியோகபூர்வ நிலைப்பாடுகளைப் பிரிதிபலிக்கவில்லை.

# உள்ளடக்கம்

**சுருக்கக் குறியீடுகள்** ..... **2**

**ACCEND கருத்திட்டம்** ..... **3**

**அறிமுகம்** ..... **4**

போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களின் வரைவிலக்கணம் ..... 4

பின்புலம் ..... 4

வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவு ..... 4

**ஆய்வு** ..... **5**

குறிக்கோள் ..... 5

ஆய்வு முறைகள் ..... 5

சவால்களும் வரையறைகளும் ..... 5

**பெறுபேறுகள்** ..... **6**

பொதுவான குடிசனவரைபியல் ..... 6

போஷாக்குமிக்க வீட்டுத்தோட்டப் பராமரிப்பு மற்றும் அபாய குறைப்பு ..... 6

சேதன வீட்டுத் தோட்டம் ..... 6

நீர் விநியோகம் மற்றும் நீர்ப்பாசனம் ..... 7

குடும்பப் போஷாக்கு ..... 8

உணவுப் பாதுகாப்பு ..... 8

கொவிட்-19 மற்றும் மீள்திறன ..... 9

பதிவு பேணுதல் ..... 10

போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களின் பொருளாதாரப் பெறுமதி ..... 11

விவசாய உயிரியல் பல்வகைமை ..... 12

பால்நிலை வகிபாத்திரங்களும் குடும்ப அலகும் ..... 12

சுற்றாடல் பாதுகாப்பு ..... 13

நீண்டகால சிறுநீரக நோய்/காரணம் கண்டறியப்படாத நீண்டகால சிறுநீரக நோய் ..... 13

**முடிவுகளும் பரிந்துரைகளும்** ..... **14**

முடிவுகள் ..... 14

பரிந்துரைகள் ..... 15

**இணைப்பு: பயனாளர்கள் பற்றிய விசேட குறிப்புக்கள்** ..... **16**

**குறிப்புகள்** ..... 19

# சுருக்கக்குறியீடுகள்

| | |
|---|---|
| **ACCEND** | போசாக்கு அபிவிருத்தி மற்றும் அதற்கான சூழலை உருவாக்குவதற்காக சமூகங்களை வலுப்படுத்தும் (ஏஸெண்ட்) திட்டம் |
| **ADRA** | அட்வென்டிஸ்ட் அபிவிருத்தி மற்றும் நிவாரண அமைப்பு (சர்வதேச அரச சார்பற்ற அமைப்பு) |
| **CKD/CKDu** | நாட்பட்ட சிறுநீரக வியாதி/காரணம் அறியப்படாத நாட்பட்ட சிறுநீரக வியாதி |
| **COVID-19** | கொரோனா வைரஸ் 2019 |
| **DDS** | போஷாக்கு மதிப்பெண் |
| **DRR** | அனர்த்த அபாய குறைப்பு |
| **DSD** | பிரதேச செயலகப் பிரிவு |
| **FAO** | உணவு விவசாய அமைப்பு |
| **FGD** | இலக்குக் குழுக் கலந்துரையாடல் |
| **GND** | கிராம சேவையாளர் பிரிவு |
| **HDDS** | குடும்ப போஷாக்கு மதிப்பெண் |
| **HH** | குடும்பம் |
| **HNC** | சுகாதாரம் மற்றும் போஷாக்குக் குழு |
| **LKR** | இலங்கை ரூபா |
| **MOH** | சுகாதார மருத்துவ அதிகாரி |
| **NHG** | போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டம் |
| **OPL** | உத்தியோகபூர்வ வறுமைக் கோடு |
| **PVC** | பொலிவைனைல் குளோரைட் |
| **SEM** | கட்டமைப்புச் சமப்படுத்தல் மாதிரி |
| **SD** | நியம விலகல் |
| **SPSS** | சமூக அறிவியலுக்கான புள்ளிவிபரப் பொதி |
| **WHO** | உலக சுகாதார ஸ்தாபனம் |

# ACCEND கருத்திட்டம்

ACCEND என்பது (சுற்றாடல் மற்றும் போஷாக்கு விருத்தியினை உருவாக்குவதில் சமூதாயங்களுக்கு உதவுதல்) 2017ஆம் ஆண்டிலிருந்து ADRA UK, ADRA இலங்கை, மற்றும் ஒக்ஸ்பாம் இத்தாலி இணைந்து நடத்தி வரும் 57 மாத காலக் திட்டமாகும். ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியினால் அமுல்படுத்தப்படும் இந்தக் கருத்திட்டம் மாத்தளை, நுவரெலியா மற்றும் மொனராகலை ஆகிய மூன்று மாவட்டங்களில் 32 தோட்டங்கள் மற்றும் 23 கிராமங்களைச் சேந்த 300,000 பேருக்கு நன்மை அளிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா மாகாணம் மற்றும் மத்திய மாகாணம் ஆகியவற்றில் சமுதாயங்களின் சுகாதாரம், போஷாக்கு மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகள் ஆகியவற்றினை மேம்படுத்துவதற்குப் பங்களிப்பு வழங்குவது இக்கருத்திட்டத்தின் இலக்காகும். இந்தக் கருத்திட்ட நடவடிக்கைகள் பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடனும், சுகாதார மருத்துவ அதிகாரியின் ஒத்துழைப்புடனும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கருத்திட்டத்தின் செயற்திட்டப் பிரதேசங்கள் மாத்தளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் அமைந்துள்ளதுடன் இவை முறையே 10 மற்றும் 13 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்குகின்றன. ஹொரன, மஸ்கெலிய மற்றும் பொகவந்தலாவ பெருந்தோட்டக் கம்பனிகளினால் முகாமைத்துவம் செய்யப்படும் 10 தேயிலைத் தோட்டங்களுக்குச் சொந்தமான 32 தோட்டப் பிரிவுகள் நுவரெலியா மாவட்டத்தின் செயற்பாடுகள் இடம்பெறுகின்ற செயற்பாட்டு பிரதேசங்களாக உள்ளன.

## பிரதான பலாபலன்கள

நீர், துப்பரவேற்பாட்டு வசதிகள், சுகாதாரம் மற்றும் போஷாக்கு ஆகிய சேவைகளை ஒருங்கிணைத்த முறையிலும், பரஸ்பர பொறுப்புமிகு முறையிலும் வழங்குவதற்காகச் சமுதாயங்களையும், அரச நிறுவனங்களையும் வலுப்படுத்துதல்.

*அனைத்துக் கருத்திட்ட நடவடிக்கைகளிலும் தொடர்புபடுகின்ற பிரதான விடயங்களாகப் பால்நிலையும், அனர்த்த அபாயநேர்வுக் குறைப்பும் காணப்படுகின்றன.*

## பிரதான வகிபாத்திரம்

சமுதாயங்களுக்கு வசதிப்படுத்தலினையும் உதவியினையும் வழங்கி கருத்திட்ட அமைவிடங்களினுள் அரசாங்க சேவைகளை வலுப்படுத்துதல்.

*சமுதாய அமைப்புக்களை உருவாக்கி அணிதிரட்டுதல், விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், பயிற்சிகளை நடத்துதல், பௌதீகக் கட்டமைப்புக்களை நிர்மாணித்தல் மற்றும் திருத்துதல், புத்தாக்கமிகு முயற்சிகளை முன்னோடியாக மேற்கொள்ளுதல், கருத்திட்ட முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுகளை முன்னெடுத்தல், திட்டமிடலிலும் கொள்கை உருவாக்கத்திலும் அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்படல் ஆகியவற்றின் மூலமாக இது இயலுமாக்கப்படுகின்றது.*

# அறிமுகம்

ACCEND கருத்திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்தில் வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பயனாளிகளின் குடும்பங்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் ஆரோக்கியமான சேதன உணவினை வழங்குவதற்காக நடத்தப்படும் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தின் தாக்கம் பற்றிய தகவல்களை இந்த அறிக்கை வழங்குகின்றது. குடும்பங்களின் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்கள் வழங்குகின்ற பொருளாதாரப் பெறுமதி மற்றும் போஷாக்குப் பெறுமதி ஆகியவை இந்த ஆய்வில் அளவிடப்பட்டுள்ளன. இலங்கைச் சூழமைவில் வீட்டுத் தோட்டங்களின் உண்மையான பொருளாதாரப் பெறுமதி இன்னும் போதியளவு அளவிடப்படாத காரணத்தினால் இந்த விடயத்தில் அதிக கவனத்தினைச் செலுத்த ஆய்வு நாடியுள்ளது.

## *போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களின் வரைவிலக்கணம்*

வருடம் முழுவதும் குடும்பத்தின் பிரதான உணவல்லாத தேவைகளுக்காகப் பல்வேறு வகையான பாதுகாப்பான (விவசாய இரசாயணங்களற்ற) போஷாக்குமிக்க உணவுகளை உற்பத்தி செய்வதற்காக சேதனப் பயிரச்செய்கை உத்திகளை ஒருங்கிணைக்கின்ற அதேவேளை கிடைக்கக்கூடிய இயற்கை வளங்களின் பயன்பாட்டினை உச்சப்படுத்தி வீட்டினைச் சுற்றியுள்ள இடங்களின் பௌதீக, சமூக மற்றும் பொருளாதாரச் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கின்ற நன்கு விருத்திசெய்யப்பட்ட பயிர்ச்செய்கை முறைமை எனப் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தினை ACCEND கருத்திட்டம் வரைவிலக்கணப்படுத்துகின்றது. போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டம் ''உணவுக்கு முதலிடம்'' என்பதில் கவனம் செலுத்துகின்றது. ஆரோக்கியமான உணவு வகைகளை உட்கொள்வதற்காக பங்களிப்பு வழங்குவதற்காக இதில் மரக்கறிகள், பழங்கள், வேர்க்கிழங்குகள், கிழங்குகள், தானியங்கள், மருத்துவ மூலிகைகள், வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றின் போதிய தாவர வகைகளும், சாத்தியமானவிடத்து பண்ணை விலங்குகளும் தேனீக்களும் மீன்களும் உள்ளடங்குகின்றன. நன்கு திட்டமிடப்பட்டுள்ள போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டம் குடும்பத்தின் போஷாக்கு நிலையினை மேம்படுத்துவதற்கு உதவுவதுடன் சமுதாயத்தின் ஒரு முன்மாதிரியாகவும் செயற்படுகின்றது.

பெருந்தோட்டங்களிலும் கிராமியச் சமுதாயங்களிலும் வாழ்பவர்களுக்குத் தோட்டம் செய்வது என்பது புதிய விடயமல்ல. இச்செயற்பாட்டின் நோக்கம் இம்மக்கள் கொண்டுள்ள அறிவுக்கு மேலும் விடயங்களைச் சேர்த்து போஷாக்கில் கவனம் செலுத்துகின்ற முறைமையான தோட்டம் ஒன்றினை வடிவமைப்பதற்கு உதவுவதாகும்.

## *பின்புலம்*

போஷாக்குமிக்க வீட்டுத் தோட்ட நடவடிக்கையின் காரணமாக மாத்தளை(200), நுவரெலியா (800) மற்றும் மொனராகலை (500) மாவட்டங்களிலுள்ள 1500 குடும்பங்கள் பயன்பெறுகின்றன. கருத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 10 கிராம சேவையாளர் பிரிவுகளில் 2019ஆம் ஆண்டில் இத்திட்டத்தினால் கணிப்பீடு ஒன்று நடத்தப்பட்டது. கணிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட 346 சிறுவர்களில் (5 வயதிற்கு குறைந்தவர்கள்), 54 சதவீதமானவர்கள் நடுத்தர அல்லது மோசமான தீவிர போஷாக்கின்மையினால் (-1 SD இக்கும் -3 SD இக்கும் இடையில்) பாதிக்கப்பட்டிருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. சமுதாயங்கள் மிகவும் பாதிப்புறுநிலையில் வறுமையினால் வாடுகின்ற இந்தப் பிரதேசங்களில் ஐந்து வயதிற்குக் குறைவான பிள்ளைகளின் போஷாக்கின்மையினை அகற்றுவதற்காக போஷாக்குமிக்க வீட்டுத்தோட்ட நடவடிக்கை 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டது. 20'X20' தோட்டத்தினுள் சேதன உணவு உற்பத்தியினை போஷாக்குமிக்க வீட்டுத்தோட்ட நடவடிக்கை மேம்படுத்தி, சேதனப் பயிர்ச்செய்கை, அவசியமான தோட்டக் கருவிகள், விதைகள் மற்றும் பயிர்கள் பற்றிய தொழில்நுட்ப வழிகாட்டலை வழங்கியது. வில்கமுவவின் நேரடிப் பயனாளிகளாக பாதிப்புறு நிலையிலுள்ள 200 குடும்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.



உரு 1: *மாத்தளை மாவட்டத்தின் வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவின் வரைபடம்*

## *வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவு*

இலங்கையின் மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்திலுள்ள வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவு ஒரு கிராமியப் பிரதேசமாகும். இங்கே மக்கள் தம் வாழ்விற்காக விவசாயத்தையே மேற்கொள்கின்றனர்:

- பரப்பளவு: 256 சதுர கிலோமீற்றரகள்
- கிராம சேவையாளர் பிரிவு: 39
- சனத்தொகை: 31,617 (2019)

# ஆய்வு

## குறிக்கோள்

நெருக்கடி நிலையின் போது போஷாக்குத் தேவைகளில் விசேட கவனம் செலுத்தி, வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவுகளில் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்கள் பயனாளிகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை உறுதிப்படுத்துவது ஆய்வின் பிரதான குறிக்கோளாகும்.

### *குறிப்பான குறிக்கோள்கள்*:

1. கொவிட் - 19 நெருக்கடியின் பின்பும் கூட வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவில், கருத்திட்டத்தினால் உதவி வழங்கப்படும் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்கள் நிலைத்து நிற்கின்றனவா என்பதை அடையாளம் காணுதல்.
2. கொவிட் - 19 போன்ற நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதற்காக போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்கள் சமுதாயங்களின் மீள்திறனை அதிகரித்துள்ளனவா என்பதனைத் தீர்மானித்தல்.
3. போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களின் வெற்றியினை உறுதிப்படுத்துவதற்கு திட்டத்தின் உத்தியோகத்தர்கள் பின்பற்றிய சிறந்த நடைமுறைகளை அடையாளம் காணுதல்.
4. குடும்ப மட்டத்தில் போஷாக்குமிக்க வீட்டுத்தோட்டத்தின் பொருளாதாரத் தாக்கத்தினை அடையாளம் காணுதல்.
5. சமூகத் தாக்கத்தினை அடையாளம் காணுதல் (குடும்பம் மற்றும் சமூகத்தாரின் ஈடுபாடு).
6. போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தின் விவசாயப் பல்வகைமையினையும் குடும்பப் போஷாக்கில் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தின் தாக்கத்தினையும் அடையாளம் காணுதல்.
7. இந்த மாதிரியினை வேறு இடங்களில் வெற்றிகரமாக பிரதிசெய்வதற்கு அல்லது அறிமுகப்படுத்துவதற்குத் தேவைப்படுகின்ற தகவல்களை அடையாளம் காணுதல்.

## ஆய்வு முறைகள்

2020 நவம்பர் முதல் 2021 ஜனவரி வரையில் ஆய்வு நடத்தப்பட்டது. இதுபோன்ற சூழமைவுகளில் நடத்தப்படும் ஆய்வுகள் அளவு மற்றும் பண்பு சார்ந்த முறைகளைப் பயன்படுத்துகின்ற காரணத்தினால் துல்லியத்தன்மையினை மேம்படுத்துவதற்கான இதே முறைகளைப் பயன்படுத்தி அடிப்படைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. நுகர்வு மற்றும் உற்பத்தி போன்ற நுண் தரவுகளைச் சேகரிப்பதற்காக அளவு சார்ந்த முறையும் (வினாக்கொத்து) பேரளவான தகவல்களையும் பொதுவான தகவல்களையும் சேகரிப்பதற்காகப் பண்பு சார்ந்த முறையும் பயன்படுத்தப்பட்டன.

வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவில் இந்தச் செயற்பாட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை (200) இந்தப் பகுப்பாய்வின் அலகாக அமைந்திருந்தது. நுண் மட்டத்திலான தரவுகளின் தேவை காரணமாக் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்ட நடவடிக்கையில் அதிகம் ஈடுபட்டிருந்த குடும்ப உறுப்பினர்களே ஆய்வில் பதிலளிக்கத் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர் (ACCEND திசைரி பராமரிப்பு மற்றும் பயிற்சி வகுப்புகளின் பங்குபற்றியவர்கள்).

தரவுப் பகுப்பாய்வுக்காகச் சமூக அறிவியலுக்கான புள்ளிவிபரவியல் பொதியும் (SPSS version 16) STATA 14 உம் பயன்படுத்தப்பட்டன. பகுப்பாய்வு செய்வதற்கு முன்னர் தரவுகள் நியம முறைகள் மூலம் பயன்படுத்தப்பட்டன. தரவு சேகரிக்கப்பட்ட பின்னர் தரவுச் சேகரிப்பாளர்களுடனான அறிவுறுத்தல் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டு அனைத்து வினாக்களுக்கும் சரியாக பதிலளிக்கப்பட்டு அவை பதியப்பட்டுள்ளனவா என்பது பரிசீலிக்கப்பட்டது.

## சவால்களும் வரையறைகளும்

- கொவிட் தொற்றின் காரணமாக சமூக இடைவெளியினையும் பயந்த் தடையினையும் கடைப்பிடிப்பதற்கான தேவை.
- நேரடியான – பௌதீக கூட்டங்களை இலக்குக் குழுக் கலந்துரையாடல்களுக்காக நடத்த முடியாமை.

# பெறுபேறுகள்

## பொதுவான மக்கள் தொகையியல்

**மாதிரி:**
**197**
(200 NHG இலிருந்து)

**பதிலளித்தவர் விபரங்களா:**
**100% பெண்கள்**
சராசரி வயது: **38**
கல்வி: **81%**
(இரண்டாம் நிலை)

**குடும்பங்கள்:**
**81% ஆண் தலைமை**


- சிங்கள பௌத்தர்கள்
- சராசரி குடும்ப அளவு: **4**
- **61%** சத வீதமானவர்களுக்கு குடும்ப செலவுகளை சமாளிப்பத்றகான போதிய வருமானம் இருக்கின்றது. ஆனால் மேலதிக வருமானம் இல்லை.

**பயிர் செய்வதில் அனுபவம்:**

- சராசரி 16 வருடங்கள்
- பயிர்ச்செய்கையின் அளவு குடும்பம் ஒன்றிற்கு
  - நெல்: 1.33 ஏக்கர்
  - மேட்டு நிலம்: 0.9 ஏக்கர்
  - போஷாக்கு மிகு வீட்டுத் தோட்டம்: 0.7 ஏக்கர்

## போஷாக்குமிக்க வீட்டுத்தோட்டப் பராமரிப்பு மற்றும் அபாய குறைப்பு

உரு 2: **போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களுக்கான பிரதான அபாயநேர்வுக் காரணிகள்**





கருத்திட்டத்தினால் வழங்கப்பட்ட மிகவும் பயன்மிக்க மூன்று விடயங்கள் (பயனாளிகளினால் அதிக திருப்தியுடன் அறிக்கையிடப்பட்டவை):

1. பீடைகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான உதவி.
2. விலங்குகளால் ஏற்படுத்தப்படும் சேதங்களிலிருந்து போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களை பாதுகாப்பதற்கான தகவல்களை வழங்கியமை.
3. உள்ளீடுகளை வழங்கியமை (விதைகள், தாவரங்கள், தோட்டக் கருவிகள்).

*எவ்வாறாயினும் பயனாளிகளின் மத்தியில் திருப்தி மட்டம் குறைவாக அறிக்கையிடப்பட்ட காரணத்தினால் காலநிலை காரணமாக ஏற்பட்ட பாதிப்பு சம்பந்தமாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.*

உரு 3: **விவசாய பொருளாதார நடைமுறைகளின் அறிவின் அடைவுமட்டம் மட்டம்**




NHG செயற்பாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட விவசாயப் பொருளாதார (பயிர் முகாமைத்துவப் நடைமுறைகள் பற்றி பதிலளித்தவர்கள் உயர் அறிவினை அறிக்கையிட்டனர். அபாயநேர்வுகளை முகாமைத்துவ செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட மிகவும் பொதுவான உபாபயமார்க்கமாக பாரம்பரிய அறிவும் சேதன உள்ளீடுகளு காணப்பட்டன.

## கருத்திட்ட உதவி மற்றும் பயனாளிகளின் கருத்தளிப்பு

**98%**


பதிலளித்தவர்களில் 98% மானவர்கள் கருத்திட்டத்தினால் தாம் பெற்ற உதவி போஷாக்குமிக்க வீட்டுத்தோட்டத்தின் வெற்றிகரமான அமுல்படுத்தலுக்கு உதவியது எனக் குறிப்பிட்டனர.



European Union
ADRA
OXFAM

*கருத்திட்டம் முடிவடைந்த பின்னரும் கூட கருத்திட்டத்தின் மூலம் தாம் பெற்ற அறிவுடன் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தினைத் தாம் தொடர விரும்புவதாக பதிலளித்த அனைவரும் ஆர்வம் தெரிவித்தனர். அவர்களின் வெற்றிக்கு முக்கியமான காரணியாக சுய முயற்சி அமைந்திருந்தது.*

உரு 4: ***போஷாக்கு மிக்க வீட்டுத் தோட்டங்களின் வெற்றிக்கான முக்கிய காரணங்கள்***




எவ்வாறாயினும் பாரம்பரிய அறிவினை அடிப்படையாகக் கொண்ட புத்தாக்கமிக்கதும் சுயமாகக் கற்றுக்கொண்டதுமான உத்திகள் அரிதாகவே நடைமுறைப்படுத்தப்பட்டதை ஆய்வுகள் எடுத்துக்காட்டின.

இந்த அவதானிப்பினை பதிலளித்தவர்களின் சராசரி நடுத்தர வயது காரணமாக நியாயப்படுத்த முடியும். இந்த தலைமுறையினர் (1980 ஆம் ஆண்டின் பின்பு பிறந்தவர்கள்) முன்னைய தலைமுறைகளிடமிருந்து பாரம்பரிய அறிவினைப் பெருமளவு பெற்றுக்கொள்ளவில்லை. மேலும், இவர்களுக்கு முன்னர் வாழ்ந்த தலைமுறைகளைப் போன்று இவர்களும் அசேதன விவசாய உள்ளீடுகளையே பன்படுத்தி வருகின்றனர். உள்ளூர் அறிவுக்கு பெறுமதியினைச் சேர்த்து பாரம்பரிய, சூழலுக்கு நட்பான உத்திகளை மீள அறிமுகப்படுத்தியதன் மூலம் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்கள் முக்கியமான வகிபாத்திரத்தினை வகிக்கின்றன.

பின்வரும் அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடானது வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதை ஆய்வு முடிவாகக் குறிப்பிடுகின்றது.





பதிலளிப்பவர்கள் தங்களது குடும்பப் போஷாக்கிற்காக பிரதானமாக போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களை நிறுவியுள்ளதாக குறிப்பிட்டனர்.

*போஷாக்குமிக்க வீட்டுத்தோட்ட ஆரம்பத்தின் போது 41 சதவீதமானவர்களினால் மாத்திரமே வருமானப் பிறப்பாக்கம் கருத்தில் கொள்ளப்பட்டது. போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தின் சேமிப்புக்கள் மூலம் கணிசமான வருமானத்தினை பெற்றுக்கொள்வது எதிர்பாராத நலன்களாக இருந்தது என குடும்பங்கள் தெரிவித்தன.*

## நீர் விநியோகம் மற்றும் நீர்ப்பாசனம்

- போஷாக்குமிகு வீட்டுத் தோட்டங்களின் வெற்றியினை தீர்மானிப்பதில் காலநிலை மாற்றம் மற்றும் பருவநிலை ஆகியவை முக்கியமான காரணிகளாக இருக்கின்றன.
- போஷாக்குமிகு வீட்டுத் தோட்டங்களின் மோசமான பராமரிப்பிற்கான பிரதான காரணியாக நீர்ப்பற்றாக்குறை அடையாளம் காணப்பட்டுள்ளது.
- போஷாக்குமிகு வீட்டுத் தோட்டங்களின் சேமிப்புக்களின் மூலம் செலவுச் சிக்கனம் மிக்க நீர்ப்பாசன உத்திகளைக் கொள்வனவு செய்ய முடியும் என்கின்ற காரணத்தினால் அவை அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.

உரு 5: ***பதிலளித்தவர்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நீப்பாசன முறைகள்***






European Union ADRA OXFAM

# சேதன வீட்டுத் தோட்டம்

*போஷாக்குமிக்க வீட்டுத்தோட்டப் பயிற்சிகளின் மூலமாக சேதன கூட்டுப் பசளை மற்றும் பசளைத் தயாரிப்பு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட காரணத்தினால் அசேதனப் பசளைகளின் பாவனை கணிசமாகக் குறைவடைந்துள்ளது.*

நொதிக்க வைக்கப்பட்ட அரிசித் திரவம், மீனில் இருந்து தயாரிக்கப்படும் பாணம், பழம் மற்றும் எரு மற்றும் ஏனைய சேதனக் கலவைகள் ஆகியவற்றினைக் கூட்டுப் பசளைக்காக பதிலளிப்பவர்கள் பயன்படுத்தியுள்ளதுடன் பீடைகளுக்கு எதிராகவும்,நோய்களுக்கு எதிராகவும் இவற்றினை பயன்படுத்தியுள்ளனர்.

**போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டம் ஒன்றிற்காக சுயமாக உருவாக்கப்படும் ஒரு பருவத்திட்கான சேதன உள்ளீடு (3 மாதங்கள்):**





*ஆரம்பத்திலே விதைப்பாதுகாப்பு மற்றும் உற்பத்திக்கான அறிவுறுத்தல்களுடன் கருத்திட்டம் 20 வகை பயிர்களுடன் 10 கிராம்களுக்கும் குறைவான விதைகளை வழங்கியது. இந்த நடைமுறையானது ஒவ்வொரு போகத்திற்கும் போதுமான உற்பத்தி விநியோகத்தினை அவர்கள் கொண்டிருப்பதற்கு அவர்களை இயலுமாக்கியது.*

# குடும்பப் போஷாக்கு

**உயர்தரமான உணவுகளின் பிரதான மூலமாக உணவுப் பல்வகைமை அடையாளம் காணப்பட்டுள்ளது.**

*பல்வகை உணவு போஷாக்கின் நிறைவினைப் பிரதிபலிக்கின்றது (Fathima & Mitchell, 2020). குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பின் ஓர் அளவீடாக 24 மணித்தியாலய உணவுப் பாவனையினை மீண்டும் நினைவுபடுத்துவதை FAO அறிமுகப்படுத்தியது . குடும்பங்களினால் நுகரப்பட்ட வெவ்வேறு உணவுக் குழுக்களின் கூட்டுத்தொகையே உணவுப் பல்வகைமைப் புள்ளியீட்டலாகக் கருதப்படுகின்றது. உள்ளூர் நிலைமைகளை கருத்தில் கொண்டு குடும்ப உணவுப் பல்வகமைப் புள்ளியினை கணக்கிடுவதற்கு 12 உணவுக் குழுக்களின் தொகுதி பயன்படுத்தப்பட்டது.*

**உரு 6: குறைந்தது ஒரு தடவையாவது நுகரப்பட்ட 12 உணவுக் குழுக்களின் 24 மணித்தியால உணவு உள்ளெடுப்பு**




**குடும்பங்களின் பெரும்பான்மையானவை 24 மணித்தியால காலப் பகுதியில் 4 - 9 வகையான உணவுக் குழுக்களை நுகர்ந்திருப்பதை ஆய்வு காட்டியது. இதனால் நடுத்தர DDS வழங்கப்பட்டது (Henrietta & Odenigbo, 2015).**

- இலங்கையின் வழமையான குடும்பங்களில் காணப்படுகின்ற பெரும்பாலும் அரிசி அடிப்படையிலான உணவின் காரணமாக தானியங்களின் உயர் விகிதாசாரம் காணப்பட்டது.
- குறைந்தளவு பழங்கள் உட்கொள்ளப்படுவதும் வழமையான இலங்கைக் குடும்பத்தினை பிரதிபலிக்கின்றது (Perera and Madhujith, 2012). மேலும் இது உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைக்கப்பட்ட அளவுகளை விடக் குறைவாகக் காணப்படுகின்றது. கடைகளில் வாங்கிய தீன் பண்டங்கள் மற்றும் இனிப்புக்களுக்கு மாற்றீடாக பழங்களை உட்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்டது.
- ஆகக்கூடுதலாக நுகரப்பட்ட உணவு வகையாக மரக்கறிகள் காணப்பட்டன. இதற்கான காரணம் மரக்கறிகள் அதிகரித்தளவில் கிடைக்கக்கூடியதாக இருப்பதும் அவற்றினைப் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களிலிருந்து பெறக்கூடியதாக இருக்கின்றமையும் ஆகும்.
- இறைச்சி, முட்டை மற்றும் தேன் ஆகியவற்றின் நுகர்வினை தேனீ வளர்ப்பு அலகு ஒன்றினைப் பேணுவதன் மூலமாக மேம்படுத்த முடியும்.

## உணவுப் பாதுகாப்பு




குடும்பங்கள் எதிர்காலப் பாவனைக்காகப் போஷாக்குமிக்க வீட்டுத்தோட்ட உற்பத்திகளை சேமித்து வைத்திருக்கின்றன. களஞ்சியப்படுத்தப்பட்ட உணவு ஆறு மாதங்களுக்கு தாக்குப்பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் 12 மாதங்களில் குடும்பங்களிடம் போதியளவு விநியோகங்கள் இருந்ததாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது (கொவிட்-19 பெருந்தொற்றுக் காலப்பகுதியின் போது)

*போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்கள் உணவுப் பாதுகாப்புக்குத் தெளிவான பாதுகாப்பினை வழங்குகின்றன என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. மேலும் வீட்டுத் தோட்டங்கள் நிறுவப்படுவதன் முக்கியத்துவத்தினையும் இவை வலியுறுத்துகின்றன. குறிப்பாக கொவிட்-19 பெருந்தொற்றுப் போன்ற பொருளாதார ரீதியாகப் பாதிப்புறுநிலை ஏற்படக்கூடிய காலப்பகுதிகளின் போது.*


## கொவிட்-19 மற்றும்

குடும்பங்களின் உணவு நுகர்வின் மீது கொவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள தாக்கங்களுக்கு ஈடுகொடுப்பதற்கு வீட்டுத் தோட்டங்கள் வழங்கும் பங்களிப்பு பற்றிய தகவல்களை வழங்குகின்ற அதேவேளை செலவு நலன் பகுப்பாய்வின் மூலமாக போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களின் பொருளாதாரப் பெறுமதியினைக் கண்டறிவதும் ஆய்வின் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்றாகக் காணப்பட்டது. ஆய்வானது பின்வருவனவற்றில் கவனம் செலுத்தியது::

- போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தின் தற்போதைய பாவனை மட்டம்
- தற்போதைய பயனாளிகளின் பொருளாதாரத்திற்கான பங்களிப்பு
- சிறந்த நடைமுறைகளை ஏற்று நடைமுறைப்படுத்துதல்
- கருத்திட்ட அணியிடமிருந்து பெறப்படும் உதவி
- செயற்பாடுகளில் சமூதாயப் பங்கேற்பு, கருத்திட்டக் காலப் பகுதியின் போது போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களின் வெற்றிகரமான அமுல்படுத்தல்களின் ஒப்பீடும் கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள உணவுப் பாதுகாப்பின்மைப் பிரச்சினையினைத் தணிப்பதற்கான அதன் பங்களிப்பின் ஒப்பீடும்

**கொவிட்-19 பெருந்தொற்றுக் காலப் பகுதியின் போது குடும்பங்கள் சுயமாக உற்பத்தி செய்த உணவு மூலமாக உணவு விநியோக சிரமங்களை எதிர்கொள்வதற்கு போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்கள் உதவியுள்ளன என்பதை ஆய்வு வெளிக் காட்டுகின்றது.**

உரு 7: **கொவிட்-19 இன் தாக்கங்களுக்கு ஈடுகொடுப்பதற்கான காரணங்களும் அதன் பொருத்தப்பாடு அளவும்**




பின்வரும் காரணங்களினால் கொவிட்-19 உணவு விநியோக வரையறைகளுக்கு ஈடுகொடுப்பதில் போஷாக்குமிகு வீட்டுத் தோட்ட நடவடிக்கை பொருத்தப்பாடு உடையதாக மதிப்படப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது:

- செயற்பாட்டிற்கான தெரிவு (94% பதிலளித்தோர்)
- விதைகள் மற்றும் தோட்டக் கருவி போன்ற உள்ளீடுகளை வழங்குதல் (93% பதிலளித்தோர்)
- பயிற்சியின் மூலமாக பெற்றுக்கொண்ட அறிவு (89% பதிலளித்தோர்)
- மிகவும் செயற்திறன்மிக்கதாக கோடிட்டுக் காட்டப்பட்ட அறுவடைக்கு பின்னரான தொழில்நுட் அறிவினைப் பெற்றுக்கொண்டமை (88% பதிலளித்தோர்)

*ACCEND கருத்திட்டத்தினால் கற்பிக்கப்பட்ட பாரம்பரிய அறிவினை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச்சுழற்சி மற்றும் பயிர்ச்செய்கை முறைகள் போன்ற நடைமுறைகள் கொவிட் காலப்பகுதியின் போது பயனாளிகளால் அடிக்கடி பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் நெருக்கடிக் காலநிலையை எதிர்கொள்வதற்கு இவை அவர்களுக்கு சிறந்த முறையில் உதவியுள்ளன.*

- உணவு உற்பத்தியின் வெவ்வேறு அம்சங்களுக்கு ஒவ்வொரு காரணமும் எவ்வாறு கொவிட் காலப்பகுதியின் போது உணவு விநியோகத்தில் ஏற்பட்ட தாக்கத்தினை ஈடுசெய்வதற்குப் பங்களிப்பு வழங்கியுள்ளது என்பதைக் கண்டுபிடிக்கக் காரணங்கள் பரிசீலிக்கப்பட்டன.
  - செயற்பாட்டின் பயனாளியாக இருப்பது குடும்பங்களின் போஷாக்குத் தேவைகளை பெற்றுக்கொள்வதற்கு பதிலளித்த 185 பேருக்கு உதவியுள்ளதுடன் இவர்களில் 45% ஆனவர்கள் அவர்களின் சொந்த உணவு உற்பத்தியினை தயாரிப்பதற்கு அவர்களை இயலுமாக்கியுள்ளது.
  - கருத்திட்ட உள்ளீடுகள் போஷாக்குத் தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பதிலளித்தவர்களில் 175 பேரில் தாக்கத்தினை ஏற்படுத்தி உணவு உற்பத்தியிலிருந்து குடும்ப வருமானத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் 33% உதவியுள்ளது.
  - அறிவினையும் பயிற்சியினையும் வழங்கியமை பதிலளித்தவர்களில் 178 பேருக்கு உதவியுள்ளதுடன் 46% அத்தியாவசிய உணவினை வளர்ப்பதற்கும் பங்களிப்பு வழங்கியுள்ளது.
- எவ்வாறாயினும், இருக்கின்ற அறிவு, வளங்கள், பயிற்சி மற்றும் வழிகாட்டல் ஆகியவற்றின் விநியோகிக்கக்கூடிய தன்மை உணவின் போஷாக்குமிகு பெறுமதியினை அடையாளம் காண்பதற்காக உதவியுள்ளது என்பதை 17% ஆன பதிலாளித்தவர்கள் மாத்திரமே அடையாளம் கண்டுள்ளனர். எனவே இந்த அம்சத்தின் மீதான முயற்சிகள் மேலும் முன்னேற்றப்பட வேண்டும்.
- பெறுமதி சேர்க்கை காரணமாகவும் பதப்படுத்தல் முறைகளின் காரணமாகவும் இலகுவில் பழுதடையும் உற்பத்திகளின் நீட்டிக்கப்பட்ட ஆயுள் காரணமாக உணவுக் கூடையில் கிடைக்கக்கூடிய பொருட்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது (அதாவது ஊறுகாய் போடுதல் போன்ற பதப்படுத்தல் உத்திகள்).
- இதன் காரணமாக பதிலளித்தவர்கள் சராசரியாக ஒரு வாரத்தினுள் 3 நாட்கள் பழங்களையும், 7 நாட்களும் மரக்கறிகளையும், 5 நாட்கள் தானியங்களையும், 7 நாட்கள் வாசனைத் திரவியங்களையும் பயன்படுத்தியுள்ளனர்.
- கொவிட்-19 காலப்பகுதியில் மஞ்சள் பற்றாக்குறை ஏற்பட்டு சந்தையில் அதன் விலை அதிஉயர்வாகக் காணப்பட்டபோது பயனாளிகளின் குடும்பங்கள் அவர்களின் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களில் பெருமளவு மஞ்சள் பயிர் செய்ததை ஆய்வு கண்டறிந்தது.
- பெருந்தொற்றின்போது மீன், இறைச்சி, முட்டை மற்றும் பால் பொருட்கள் ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொண்ட புரத மூலங்கள் அரிதாகக் காணப்பட்டன. சமநிலையான உணவினை வழங்குவதற்காக போஷாக்குமிகு வீட்டுத் தோட்டங்களுக்கு பொருத்தமான கால்நடைகளை அறிமுகப்படுத்துவது பரிந்துரைக்கப்படுகின்றது.

## பதிவு பேணுதல்

ACCEND கருத்திட்டத்தினால் போஷாக்குமிக்க வீட்டுத்தோட்டப் பதிவுப் புத்தகங்களின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்ட நாளாந்த சுய அறிக்கையிடல் முறைமையானது அறுவடை மற்றும் அதன் சந்தைப் பெறுமதிகள் பற்றிய நியாயமான, நம்பத்தகுந்த பதிவினை வழங்கியுள்ளது. சுய அறிக்கையிடல் முறைமையின் குறிக்கோள் பயனாளிகள் போஷாக்குமிக்க வீட்டுத்தோட்டங்கள் மூலமாக மேற்கொள்ளும் சேமிப்பின் பெறுமதியினை புரிந்துகொண்டு மிகையான அறுவடையினை விற்பதன் மூலம் ஈட்டிக்கொள்கின்ற வருமானத்தின் பெறுமதியினையும் புரிந்துகொள்வதாகும். இந்த அறிக்கைகள் தோட்டக் கணக்குகளுக்கும் ஒரு விதமாகவே பலனளிக்கின்றன. தங்களின் முன்னேற்றங்களைப் பரிசீலிப்பதற்கும் உணவுச் செலவுகளின் குறைப்புக்களின் மூலமாக மேற்கொள்ளப்படும் சேமிப்புக்களினால் கிடைக்கும் காசு உட்பாய்ச்சல்களைப் பரிசீலிப்பதற்கும் பயிர் விற்பனையினைப் பரிசீலிப்பதற்கும் இது பயனாளிகளுக்கு உதவுவதுடன் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களின் பொருளாதாரப் பெறுமதியினைப் பகுப்பாய்வு செய்வதற்கும் இது பயன்படுத்தப்பட்டது.



உரு 8: லலனி காங்சனா 25, கும்புகந்தன கிராமசேவையாளர் பிரிவு தனது GND பதிவு புத்தகத்தினை வைத்திருக்கின்றா.

# போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களின் பொருளாதாரப் பெறுமதி

ஜீவனோபாய மட்டத்தின் பிரகாரம் உணவுப் பாதுகாப்புக்கு உதவி வழங்குகின்ற, குறைந்த கவனத்தினைத் தேவைப்படுத்துகின்ற பொருளாதாரம் சாராத நடவடிக்கையாகவே வீட்டுத் தோட்டம் மேம்படுத்தப்படடது. எவ்வாறாயினும் பொருளாதாரப் பகுப்பாய்வு மூலமாக குடும்பப் போஷாக்கினை மேம்படுத்துகின்ற அதேவேளை வருமானப் பிறப்பாக்கம் மூலமாக வறுமைக் குறைப்புக்கும் வீட்டுத்தோட்டங்களினால் உதவ முடியும் என்பதை இந்த ஆய்வு வெளிக்காட்டுகின்றது.

**2021 மார்ச் மாதத்திற்கான இலங்கையின் உத்தியோகபூர்வ வறுமைக் கோடு 5181 ரூபாய் ஆகும். மேலும் இது மாத்தளை மாவட்டத்திற்கு 5271 ரூபாவாக காணப்பட்டது. போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தின் மூலமாக குடும்பம் ஒன்று ஈட்டுகின்ற சராசரி மாதாந்த வருமானம் தேசிய உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டினை விடவும் மாத்தளை மாவட்டத்திற்காகக் கணக்கிடப்பட்ட உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டினை விடவும் மூன்று மடங்கு பெரியதாகும்.**

அட்டவனை 1: **போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தின் பொருளாதாரப் பெறுமதியின் தொகுப்பு:**

| எண் | விபரம் | பெறுமதி |
|---|---|---|
| 1 | சராசரி குடும்ப அளவு | 4.03 |
| 2 | பதிலளித்தவர்களின் சராசரி பயிர்ச்செய்கை அனுவபவம் | 16 ஆண்டுகள் |
| 3 | மாதம் ஒன்றுக்கு போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தின் சராசரி உற்பத்திச் செலவு (400 சது அடிப் பரப்பளவு) | 1000 LKR |
| 4 | மாதம் ஒன்றுக்கு போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தின் சரசாரி மொத்த வருமானம | 17,000 LKR |
| **5** | **மாதம் ஒன்றுக்கு போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தின் சராசரி மாதாந்த இலாபம்** | **16,000 LKR** |

கிராமியக் குடும்பம் ஒன்றின் சராசரி மாதாந்த வருமானம் 58,137 ரூபாவாக அறிக்கையிடப்பட்டுள்ளது (HEIS-DCS, 2016). எனவே இந்தத் தொகையில் நான்கில் ஒரு மடங்கினை மிகையான அறுவடையினை விற்பதன் மூலமாகவும் கிராமிய சமூதாயங்களின் உணவுச் செலவுக்கான குறைக்கப்பட்ட தொகையினால் ஏற்படும் சேமிப்பு மூலமாகவும் போஷாக்கு மிகு வீட்டுத் தோட்டங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

*வீட்டுத் தோட்டம் என்பது பொதுவாக ஜீவனோபாய நடவடிக்கையாக கருதப்பட்டாலும் கூட போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தின் பொருளாதாரப் பெறுமதியினை குடும்ப வருமானத்திற்கான முக்கியமான பங்களிப்பாக பயன்படுத்த முடியும் என்பதைப் பெறுபேறுகள் காட்டுகின்றன.*

***இந்தப் பொருளாதாரப் பகுப்பாய்வானது வருமானப் பிறப்பாக்க மூலமாகவும், குடும்பப் போஷாக்கு மூலமாகவும் வறுமைக் குறைப்புக்குப் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தின் சாத்தியமான பயன்பாட்டினை காட்டுகின்றது.***




உரு 9: எஜி சந்திரிக்கா குமாரி (வனவள கிராம சேவையாளர் பிரிவு.) NHG சேமிப்புக்களிலிருந்து நீர் விசிறியினையும், நீர் குழாயினையும் வாங்கியுள்ளார்.

**வெற்றிக் கதை:** 6 பயனாளிகள் போஷாக்கு மிகு வீட்டுத் தோட்டத்திலிருந்து பெற்றுக்கொண்ட வருமானத்தினை குறிப்பிட்ட பயிர்ச்செய்கைக் காலப்பகுதியின் போது நீர்விசிறிகளை கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தியுள்ளனர். 28 பயனாளிகள் சராசரியாக 2223 ரூபாவினை PVC பைப்களை வாங்குவதற்கும், நீர் விசிறிகளின் பாகங்களை வாங்குவதற்கும் அதன் பராமரிப்புக்காகவும் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்திலிருந்து பருவகாலக்கில் கிடைக்க வருமானக்கினை பயன்படுக்கியள்ளனர்.

## விவசாய உயிரியல் பல்வகமை

நடவடிக்கையின் ஆரம்பத்தில் கருத்திட்டமானது பயனாளிகளுக்கு 20 வகையான பயிர்களை (மூலிகைகள், மரக்கறிகள் மற்றும் பழங்கள்) விநியாகித்த போதிலும் அவர்களின் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தில் 40 முதல் 50 வகையான உணவுப் பயிர்களை அவர்கள் கொண்டிருந்தனர். இதிலே மஞ்சள் கடலை, சுரக்காய், சாம்பல் பூசணி, பாரம்பரிய சோளம் மற்றும் சமைக்கும் முலாம்பழம் போன்ற பாரம்பரிய வகைகள் உள்ளடங்கியிருந்தன. உணவுப் பயிர்களுக்கு மேலதிகமாக போஷாக்குமிக்க வீட்டுத் தோட்ட மாதிரியின் நடவடிக்கைகளில் மருத்துவ மூலிகைகளும் தாவரங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. மருத்துவப் பயிர்களின் பயிர்ச்செய்கை தொடர்பான விபரங்கள் கீழே வரைபிலே காட்டப்பட்டுள்ளன.

உரு 10: **NHGஇல் பயிர் செய்யப்பட்ட மருத்துவப் பயிர்கள்**







உரு 11: நில்மினி பெரேரா கும்புகந்தன கிராம சேவையாளர் பிரிவு உள்நாட்டுச் சாம்பல் பூசணி வகையினை காட்டுகின்றார் அவர் சமுதாய உறுப்பினர்களுடன் அதனை பகிந்திருக்கன்றார்.

## பால்நிலை வகிபாத்திரங்களும் குடும்ப அலகும்


81% குடும்பங்கள் ஆண்களைத் தலைமையாகக் கொண்டிருந்த போதிலும் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்கள் பற்றிய மற்றும் குடும்பப் போஷாக்கு பற்றிய தீர்மானங்களை கணவனும், மனைவியும் சேர்ந்தே எடுத்துள்ளனர் என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டப் பராமரிப்புத் தொடர்பான சம்பந்தப்பட்ட தரவுகள் **40%** குடும்பங்களில் கணவனாலும், மனைவியினாலும் கூட்டாகப் பெறப்பட்டுள்ளன. **தோட்டங்களுக்கான ஊழியப் பங்களிப்பு கணவனினதும், மனைவியினதும் சமமான ஊழியத்தினைக் கொண்டுள்ளது.**




*போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களின் பயன்பாட்டின் காரணமாகவும், குடும்ப வருமானம் மற்றும் சுகாதாரத்திற்கான அதன் கணிசமான பங்களிப்புக்கள் காரணமாகவும் ஆர்வத்தினை பெற்றுக்கொண்ட காரணத்தினாலேயே குடும்பத்தின் இந்த கூட்டுமுயற்சியும் ஆதரவும் பெறப்பட்டுள்ள*

உரு 13 **போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டப் பராமரிப்புக்கான முழுக் குடும்பப் பங்களிப்பு (மணிநேரம்/வாரம்)**


உரு 12: **பால்நிலை அடிப்படையில் விவசாய பொருளாதார நடைமுறைகள் பற்றிய தகவல் சேகரிப்பு (%)**



## சுற்றாடல் பாதுகாப்பு

வீட்டுத் தோட்டம் ஒன்று இருப்பது பெருமளவுக்கு இயற்கையில் தங்கியுள்ளது. எனவே போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களின் நீடுறுதித்தன்மைக்கான முக்கியமான காரணியாகச் சுற்றாடல் பாதுகாப்பு அமைந்துள்ளது. இந்தக் காரணத்திற்காக சேதன உத்திகளை ஒருங்கிணைக்கின்ற நடைமுறைகள் மூலமாக மண், நீர் மற்றும் நிலம் ஆகியவற்றுக்கான பாதுகாப்பு உபயமார்க்கங்களை கருத்திட்டம் வலியுறுத்தியுள்ளது.

உரு 14: **குடும்பங்கள் ஏற்று நடைமுறைப்படுத்திய மண் பாதுகாப்பு முறை (%)**




- பயனாளிகளில் **80%** மர நடுகையினை மேற்கொள்கின்றனர். இது போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களினுள் போர்வைக்கான அடுக்கினை வழங்கி மழைநீர் மற்றும் மண்ணரிப்பு ஆகியவற்றின் வேகத்தினை முறைமை வாய்ந்த வகையில் குறைக்கின்றது.
- பயனாளிகளில் **78%** சதவிகிதமானவர்களால் உள்ளூர் பயிர் வகைகள் பயிர்செய்யப்பட்டன. மண்ணின் போஷாக்கின் மீது ஏற்படுத்தும் பாதகமான தாக்கத்தின் காரணமாகக் கலப்பின / தனித்த பாவனை விதைகள் வழங்கப்படவில்லை.
- நடவடிக்கைகளினுள் தழைக்கூழ்ப் போர்வை **91%** சதவிகிதமான பயனாளிகளினால் மண்ணின் ஈரப்பதனை பாதுகாப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது.
- நீர் பாய்ச்சுதல், சொட்டு நீர்ப்பாசனம், நீர் விசுறுதல் போன்ற நீர்ப்பாசன உத்திகள் நீர்ப்பாவனையின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக **60%** சதவிகித பயனாளிகளினால் பயன்படுத்தப்பட்டன.


## நீண்டகால சிறுநீராக நோய் / காரணம் கண்டறியப்படாத நீண்டகால சிறுநீரக நோய்

நீண்டகால சிறுநீரக நோய். காரணம் கண்டறியப்படாத நீண்டகால சிறுநீரக நோய் ஆகியவற்றின் மீது போஷாக்குமிகு வீடுத் தோட்டங்களின் தாக்கம்:

1. கருத்திட்டத்தின் இடையீட்டின் காரணமாக பின்வரும் பரப்புக்களில் பயனாளிகள் அறிவினைப் பெற்றுக்கொண்டனர் என ஆய்வு காட்டுகின்றது. முதலாவது, பயனாளிகளில் **89%** ஆரோக்கியமான உணவுகளைத் தெரிவுசெய்தனர.
2. பதிலளித்த **95%** சதவிகிதமானவர்கள் வீட்டுத் தோட்டங்களில் போஷாக்குச் செழுமைமிக்க உற்பத்திகளைப் பயிர்செய்துள்ளனர்.
3. பதிலளித்தவர்களில **97%** சதவீதமானவர்கள் ஆரோக்கியமான முறையிலே உணவினை தயார் செய்துள்ளனர்.



உரு 15: கொம்புக் கந்தர நாளனி காஞ்சனாவின் தந்தையும் அவரின் சமூதாயத்திலுள்ள நாள்பட்ட சிறுநீரக நோயாளிகளைப் போன்ற போஷாக்குமிகு வீட்டுத் தோட்டம் தனது ஆரோக்கியத்திற்காக சுகாதாரமான தெரிவுகளை மற்றம் சேதனத் தெரிவுகளை வழங்கியமைக்காக நன்றி தெரிவிக்கின்றார்..




போஷாக்குமிக்க வீட்டுத்தோட்ட நடவடிக்கை ஆரோக்கியமான, பாதுகாப்பான (இரசாயனமற்ற) உற்பத்தியினைத் தெரிவுசெய்வதற்கான, தயாரிப்பதற்கான மற்றும் 95 சதவிகித திருப்தியுடன் பயிர்செய்வதற்கான போதிய தகவல்களைத் தமக்கு வழங்கியதாக 95 சதவிகிதமான பதிலளிப்போர் குறிப்பிட்டனர்.

# முடிவுகளும் பரிந்துரைகளும்

## முடிவுகள்

1. குடும்பங்களின் போஷாக்குத் தேவைகளைக் குறைநிரப்பியதன் மூலம் கொவிட்-19 நெருக்கடியின் போது வில்கமுவயில் உள்ள போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்கள் பயனாளிகளுக்கு உதவி வழங்கியுள்ளன. பயனாளிகள் பழங்களுக்காகவும், மரக்கறிகளுக்காகவும் சந்தையில் தங்கியிருத்தல் மிகவும் குறைவாகக் காணப்பட்டது. இதன் பயனாக அதிகமான குடும்பங்கள் உணவுப் பற்றாக்குறைக்கு முகங்கொடுக்கவில்லை என்பதுடன் வீட்டில் வளர்த்துள்ள மரக்கறிகளை நுகர்ந்துள்ளனர். நெருக்கடியின் போது கூட பிரதான குறிக்கோளினை அடைவதற்கு இது உதவியுள்ளதுடன் போஷாக்குமிக்க வீட்டுத்தோட்டங்களின் ஒட்டுமொத்த வெற்றியினை இது கோடிட்டுக் காட்டுகின்றது.
2. வில்கமுவ பிரதேசத்திலுள்ள போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்கள் (நெருக்கடி தோன்றியதில் இருந்து 11 மாதங்களின் பின்னரும் கூட) இன்னும் நீடுறுதியானவையாக இருக்கின்றன. கொவிட்-19 நெருக்கடியின் போது வீட்டுத் தோட்டங்கள் வழங்கிய அதீத நன்மை காரணமாக அவற்றின் முக்கியத்துவத்தினைப் பயனாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். இதன் காரணமாக பதிலளித்தவர்களில் 98% தங்களின் ஆரம்பக் கட்டப் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களை பாரிய பிரதேசங்களுக்கு விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கின்றனர்.
3. ஈடுகொடுத்தல் பொறிமுறையாக, போதிய பயிர் உற்பத்தியினைப் பேணுவதற்கு கொவிட்-19 இன் போது குறிப்பாக வலுவூட்டப்பட்ட, போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களில் ஆரம்பத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட சிறந்த நடைமுறைகளைப் பயனாளர்கள் அமுல்படுத்தியுள்ளனர். இந்த நடைமுறைகளுள் பயிர்ச்சுழற்சி, பாரம்பரிய அறிவினை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச்செய்கை முறைகள், விதைகளைப் பகிர்தல், சகபயனாளர்களின் மத்தியில் அறிவு மற்றும் சேதன உள்ளீடுகளைப் பகிர்தல் ஆகியன உள்ளடங்குகின்றன.
4. சேமிப்புக்களின் மூலமாகவும், மிகையான அறுவடைகளின் விற்பனைகளின் மூலமாகவும் பயனாளிகளுக்கு போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்கள் பொருளாதார நன்மைகளையும் வழங்கியுள்ளன. போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டம் ஒன்றின் உண்மையான மாதாந்த வருமானப் பெறுமதி மாத்தளை மாவட்டத்தின் உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டினை விட சுமார் மூன்று மடங்கு பெரியது எனச் செலவு நலன் பகுப்பாய்வினைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்ட பொருளாதாரப் பெறுமானத்தின் அளவுக் கணிப்பீடு காட்டுகின்றது (16,000 ரூபா). வெறுமனே ஜீவனோபாய நடவடிக்கையாக இருப்பதை விட, குடும்பத்தின் போஷாக்கினை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்குவதிலும், வறுமைக் குறைப்புக்கு பங்களிப்பு வழங்குவதிலும் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்கள் வகிக்கின்ற முக்கிய வகிபாத்திரத்தினை இந்த அளவீடு உறுதிப்படுத்துகின்றது.
5. சராசரியாக ஆறு மாதங்களுக்கு நிலைத்திருக்கக்கூடிய உணவுகளின் கணிசமான எண்ணிக்கையினை உணவுக் களஞ்சியம் மற்றும் இருப்புக்கள் காட்டியுள்ளன. குடும்பங்களில் 90 சதவிகிதமானவை கடந்த 12 மாதங்களுக்குப் போதிய உணவினை வைத்திருந்தன. பெரும்பான்மையான குடும்பத்தினர் அத்தியாவசிய உணவுக் குழுவினை போதியளவு நுகர்ந்துள்ளனர் என்பதை வாராந்த மற்றும் 24 மணித்தியாலய உணவுப் பயன்பாடு காட்டுகின்றது. இதில், பெருந்தொற்றின் போது விலங்கு உற்பத்திகள் போன்றவை உள்ளடங்கவில்லை. எனவே இக்குடும்பங்களின் போஷாக்குத் தேவைகளில் அதிகமானவற்றைப் பூர்த்திசெய்ய வீட்டுத் தோட்டங்கள் அவசியமானவையாகக் காணப்படுகின்றன.
6. போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்கள் உயிரியல் பல்வகமையில் மிகவும் செழிப்பானவையாகக் காணப்படுகின்றன. சேதனக் கூட்டுப்பசளை போன்ற வீட்டில் தயாரிக்கப்பட்ட உள்ளீடுகளைக் கொண்டு பயிர்களின் உள்ளூர் வகைகளே வளர்க்கப்படுகின்றன. இவ்வகைகளின் விதைகள் கருத்திட்ட அணியின் உதவியுடன் சிறந்த நடைமுறையாகக் குறிப்பிட்ட பாதுகாப்பு நடைமுறைகளைப் பயன்படுத்திப் பயனாளிகளினால் தயாரிக்கப்படுகின்றன.
7. போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களை அமைப்பதில் சேதன உணவினை வளர்த்தல் அல்லது குறைவான உள்ளீடுகளைப் பயன்படுத்துதல் தொடர்பான மனப்பாங்கு மாற்றம் முக்கியமானதாகும். மேலும், போஷாக்குமிக்க உணவினைக் கண்டுபிடிப்பதில் காணப்பட்ட புலனுணரப்பட்ட தடைகளும், சிரமங்களும் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களில் ஈடுபடுவதில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன.

## பரிந்துரைகள்

தற்போது அமைந்துள்ள இடத்திலேயே போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்கள் செயற்திறன்மிகு முறையில் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது அவை வேறு இடங்களுக்கு விஸ்தரிக்கப்படும் போது செயற்திறன் மிகுமுறையில் பயன்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தப் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென ஆய்வுகளிலிருந்து கண்டறியப்பட்டவை உறுதிப்படுத்துகின்றன.

1. செயற்பாட்டின் ஆரம்பத்தில் செயற்பாடு பற்றியும் உருவாக்கப்படவுள்ள விவசாயப் பொருளாதார நடைமுறைகளின் நன்மைகள் பற்றியும் உரிய விழிப்புணர்வு உருவாக்கப்படல் வேண்டும். ஏனெனில் இது மக்களுக்கு உத்வேகம் வழங்குகின்றது.

2. மேம்படுத்தப்பட்ட போஷாக்கு மற்றும் குடும்ப வருமானத்திற்கு போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்கள் பங்களிப்பு வழங்குகின்றன. எனவே வறுமைக் கோட்டிலே (உப உற்பத்தியாக) வீட்டுத் தோட்டங்கள் கொண்டுள்ள தாக்கத்தின் காரணமாகவும் அவை போஷாக்குத் தொடர்பான பிரச்சினைகளைத் தடுத்து அவற்றினை மேம்படுத்துவதில் கொண்டுள்ள முக்கியத்துவத்தின் காரணமாகவும் கிராமப் பிரதேசங்களில் போஷாாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களை மேம்படுத்துவது பரிந்துரைக்கப்படுகின்றது.

3. NHGs சேமிப்புக்களைப் பயன்படுத்தி NHGs உட்கட்டமைப்புக்களில் முதலீடுகளை மேம்படுத்துவது அதிகரித்த வருமானத்தினை ஊக்குவிப்பதுடன் வறுமைக் குறைப்பையும் குடும்பங்களில் தங்கியிருத்தலில் குறைப்பையும் ஏற்படுத்தும்.

4. பிரதான பெறுமதியாக மேம்படுத்தப்பட்ட போஷாக்கு இலக்குவைக்கப்பட்ட காரணத்தினால் சந்தைப்படுத்தல் மற்றும் விலைத் தளம்பல் பற்றிய அறிவினை வழங்குவது பெரிதும் கருத்தில் கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும் பிரதான பெறுமதியினைப் பேணுகின்ற அதேவேளை இவ்வாறான தகவல்களை வழங்குவது மிகையான அறுவடையின் விற்பனை மூலமாகப் பொருளாதார நலன்களை அதிகரிப்பதற்குப் பரிந்துரைக்கப்படுகின்றது.

5. கால்நடைகள் வருமானத்தினையும், போஷாக்கினையும் அதிகரிக்கும் என்கின்ற காரணத்தினால் அவற்றின் அறிமுகமானது முக்கியமானதாகவுள்ளது.

6. தேனி வளர்ப்பினால் சூழல் முறைமைக்கும், உணவு உற்பத்திக்கும், குடும்ப வருமானத்திற்கும், போஷாக்கிற்கும் கிடைக்கின்ற எண்ணற்ற நன்மைகளின் காரணமாக Bio-Fin கருத்தியல் போன்ற பொருத்தமான முன்னெடுப்புடன் தேன் தயாரிப்பு பற்றிய அறிவினை வழங்குவது முக்கியமானதாகும். (UNDP, 2018)

7. பிரச்சினை மிகு சூழ்நிலைகளில் மக்களின் மீண்டெழுந்தன்மையினை மேம்படுத்துவதற்கு போஷாக்குமிக்க வீட்டுத்தோட்ட அலகுகள் பயன்படுத்தப்பட முடியும் . எனவே வேறு இடங்களிலும் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களை அமைப்பது பரிந்துரைக்கப்படுகின்றது.

8. வீட்டினை அடிப்படையாகக் கொண்ட பாரம்பரிய சேதன உள்ளீடுகள் பயிர்ச்செய்கையின் செலவினைக் குறைத்து, சுகாதார அபாயநேர்வுகளைக் குறைத்து, விவசாயிகளினால் நடைமுறைப்படுத்தப்படுவது இலகுவாகின்ற காரணத்தினால் இவற்றினை அதிகளவு பயன்டுத்துவது பரிந்துரைக்கப்படுகின்றது.

9. போட்டியினைக் குறைவாகப் பேணுவதற்காகவும் போஷாக்கினை மையப்படுத்திய விழுமியங்கள் என்கின்ற உண்மையான நோக்கத்தினைப் பாதுகாப்பதற்காகவும் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டங்களைப் பொருளாதார அலகுகளாக மேம்படுத்துவது பரிந்துரைக்கப்படவில்லை(வர்த்தக மயமாக்கம்).

10. ACCEND கருத்திட்டத்தின் பின்னர் போஷாக்குமிக்க வீட்டுத்தோட்டங்களின் வெற்றியும் நீடுறுதியான தன்மையும் அவற்றினை அரசாங்க நிறுவனங்களின் கீழ் அல்லது அரசாங்க நடவடிக்கைகளின் கீழ் இணைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட முடியும். அதாவது அரசாங்கத்தினைப் பங்கீடுபாட்டாளர்களாக மாற்றுவதன் மூலம், சௌபாக்கியா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் (இது தற்போது அனுஷ்டிக்கப்படுவதில்லை).


European Union ADRA OXFAM

# இணைப்பு: பயனாளர்கள் பற்றிய விசேட குறிப்புக்கள்

உரு 16: **நடத்தை மாற்றம் பற்றிய ஊக்கம் தரும் உதாரணம்**



பழுப்பிட்டிய கிராம சேவகர் பிரிவினைச் சேர்ந்த இரேஷா ஹேமகுமாரி தனது வயலில் வேலை செய்யும் போது அல்லது போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்யும் போது பாதுகாப்புக் கையுறைகளையும் காலணிகளையும் அணிந்துகொண்டு தனது சமுதாயத்திற்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகின்றார். இந்த சமுதாயம் இலங்கையிலே காரணம் அறியப்படாத நீடித்த சிறுநீரக நோயாளர்களை அதிகம் கொண்ட ஒரு பிரதேசமாகக் காணப்படுகின்றது.

உரு 17: **சமுதாயத்தில் செல்வாக்குச் செலுத்துபவர்**

கும்புகந்தன கிராம சேவையாளர் பிரிவினைச் சேர்ந்த நில்மினி பெரேரா தனது வீட்டில் தயாரிக்கப்பட்ட சேதனத் திரவங்களையும், வீட்டுத் தோட்டக் கருவிகளையும், வீட்டுத் தோட்டப் பொருட்களையும் வைப்பதற்காக ஒரு சிறிய குடிசையினை முதலில் கட்டிய பயனாளர்களில் ஒருவராக இருக்கின்றார். அயல் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 8 – 10 ஏனைய பயனாளர்களும் இவரைப் பின்பற்றத் தொடங்கியுள்ளனர்.



உரு 18 (a,b,c): **குடும்பப் போஷாக்கு மற்றும் பங்கேற்பு**

பலுப்பிட்டிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த இந்திராணி குணவர்தன தனது மகளான இரேசா குமாரியின் முயற்சியினால் தூண்டுதல் பெற்று தனது சொந்த வீட்டுத் தோட்டத்தினை ஆரம்பித்துள்ளார். .இரேசா குமாரியின் மூன்று வயது மகள் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் எடை குறைந்தவராகக் காணப்பட்டார். (<-2SD) போஷாக்கு மிக்க வீட்டுத் தோட்டத்தின் காரணமாக மகள் இப்பொழுது சாதாரண எடை வீச்சினுள் உள்ளார். ACCEND கருத்திட்டத்தினால் வழங்கப்பட்ட சேமிப்பு உண்டியலின் மூலமாக பணத்தினை NHG சேமிப்பதற்கான ஊக்கத்தினைம் இந்திராணி பெற்றுள்ளார்.









# பயனாளர்கள் பற்றிய விசேட குறிப்புக்கள்

உரு 19 (a,b,c): **விதைப் பாதுகாப்பு**

லேதியங்கல கிராம சேவையாளர் பிரிவினைச் சேர்ந்த குமாரி மெனிக்கே நேர்த்தியாகப் பட்டியலிடப்பட்டுள்ள பக்கட்டுக்களில் அறுவடைகளிலிருந்து பெற்றுக்கொண்ட விதைகளைக் கவனமாகப் பாதுகாக்கின்றார். வீட்டுத் தோட்டங்களைப் பாதுகாப்பதற்கான அவரது சமுதாயக் கண்காட்சியிலே அவர் தனது விதைகளை காட்சிப்படுத்தவுள்ளார்.










உரு 20 (a,b,c): **இரசாயணப் பயிர்ச்செய்கையிலிருந்து சேதனப் பயிர்ச்செய்கைக்கு**

வெகரகல கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மல்லிகா ரணசிங்க HNC இன் உறுப்பினராவார். மேலும் போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டப் பயிற்சிகளுக்குப் பின்னர் சேதன உத்திகளை எவ்வாறு பயன்படுத்துவது என அறியாமல் இருந்த பல பயனாளர்களில் ஒருவராக இவர் காணப்படுகின்றார். பெற்றுக்கொண்ட அறிவினைக் கொண்டு மேலும் தனது குடும்பத்தின் உதவியினையும் பெற்றுக்கொண்டு, இவர் போதியளவு சேதன உற்பத்திகளைப் பயிர்செய்திருக்கின்றார். கொவிட் நெருக்கடி காலப்பகுதியின் போது இவர்கள் இந்த உற்பத்திகளினால் பெரிதும் பயனடைந்திருக்கின்றனர். தனது பிள்ளைகளின் கல்விச் செலவுக்காகவும் NHG சேமிப்புக்களை இவர் பயன்படுத்தியிருக்கின்றார்.










உரு 21: **NHG சேமிப்புக்களும், குடும்பங்களுக்கான பொருளாதார நன்மைகளும**



NHG அறிவுரை வழங்குனரான திரு. லலிந்திர யசமல் கபுறுஓயா கிராம சேவையாளர் பிரிவினைச் சேர்ந்த ஜி.ஜி ஹீன்மெனிக்கே அவரது 20’x20’ அடி NHG விஸ்தரிக்கப்பட்டுள்ள பாரிய நிலப்பிரதேசத்தினைப் பார்வையிடுகின்றார். கொவிட்-19 முழு முடக்கத்தின் போது இவர் தனது வீட்டுத் தோட்டத்தில் இருந்து பெற்றுக்கொண்ட பெருவாரியான உற்பத்திப் பொருட்கள் இவரது சமூகத்திலே பகிரப்பட்டு, விற்கப்பட்டு இவர் 80,000 ரூபா வருமானத்தினையும் பெற்றுக்கொண்டார். நீடித்த சிறுநீரக வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ள தனது கணவருக்கு பராமரிப்பு வழங்குவதற்கு இந்த வருமானம் இவருக்கு உதவியதுடன் இக்காலப் பகுதியில் கணவர் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதற்கும் இவருக்கு இந்த வருமானம் உதவியுள்ளது.

# பயனாளர்கள் பற்றிய விசேட குறிப்புக்கள்

உரு 22 (a,b): **தொழில் முனைவோர்**




கபுறுஓயா கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த நிமாலி சாந்தி மின்சார ஒட்டுக் கருவியினைக் கொள்வனவு செய்துள்ளார். இதனைப் பயன்படுத்தி இவர் சேதனச் சந்தைகளில் விற்பதற்காக 5 கிலோ எடையுள்ள பாரம்பரிய விதை வகைகளைப் பொதி செய்கின்றார் (ஒரு மாத காலப்பகுதியில் சேமித்தவை). 1 கிலோ வெள்ளரிக்காய் விதை 4000 ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.




உரு 23 (a,b): **NHG சேமிப்புக்களும் தரமுயர்த்தலும்**







வனரவ கிராம சேவையாளர் பிரிவினைச் சேர்ந்த இரோசா சந்தமாலி போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தினைத் தனது முழு வீட்டினையும் சுற்றி விஸ்தரித்துள்ளார். இவர் NHG சேமிப்புக்களின் மூலமாகக் குழாய்களையும், நீர் விசிறிகளையும் கொள்வனவு செய்து தனது நீர்ப்பாசன முறைகளைத் தரமுயர்த்தியுள்ளார். தனது வீட்டுத் தோட்டத்திற்காக வீட்டிலே கூட்டுப் பசளைகளைத் தயாரித்துவருகின்ற பயனாளர்களில் ஒருவராக இவர் இருப்பதுடன் மிகையான பசளையைத் தனது அயல் தோட்டக்காரர்களுடன் பகிர்ந்துகொள்கின்றார்.

# பயனாளர்கள் பற்றிய விசேட குறிப்புக்கள்

உரு 24 (a,b): **வலுவூட்டப்பட்ட பெண் தலைவர் மற்றும் சமுதாயச் செல்வாக்குச்செலுத்துனர்**


a

கும்புகந்தன கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த சஞ்சீவனி வீரக்கோன் போஷாக்குமிக்க வீட்டுத்தோட்டப் பயனாளர்களில் ஒருவராவார். இவர் ACCEND கருத்திட்டத்தினால் மேம்படுத்தப்பட்ட சேதன வீட்டுத் தோட்டத்தின் கருத்தியலினைப் பற்றிப்பிடித்துக் கொண்டு அதன் நன்மைகளைப் பூரணமாக பெற்றுக்கொண்டுள்ளார். மூன்று வயது நிரம்பிய எடை குறைந்த தனது பிள்ளையுடனும் காரணமறியப்படாத நீடித்த சிறுநீரக நோயாளர்களான தனது பெற்றோருடனும், கணவருடனும் இந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட சஞ்சீவனி, இந்தக் கருத்தியலுக்குத் தனது முயற்சியினைச் செலவழித்து உள்ளூர்ப் பயிர்களில் 50 வகைகளுக்கும் மேற்பட்டவற்றைத் தனது போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி செய்துள்ளார்.


b

போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டப் பயிற்சிகளின் மூலமாக தான் கற்ற முறைகளை தனது அயலவர்களும் சமுதாய உறுப்பினர்களும் ஏற்று நடைமுறைப்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தியதன் மூலம் அவர்களுக்கு உதவிவழங்கித் தனது அறிவினைப் பகிர்வதற்காக தனது வண்ணமயமான, ஆக்கத்திறன்மிக்க NHG பதிவுப் புத்தகங்களையும் அவர்களுடன் பகிர்ந்துகொண்டுள்ளார். இவ்வாறான ஒரு செல்வாக்குச்செலுத்துனராக இருப்பது ஒரு பெண்ணாக இவரை வலுவூட்டியுள்ளது என்பதற்கான சாட்சியாக இவர் விளங்குகின்றார். இவர் வீட்டில் மட்டுமல்லாது இவரது சமூதாயத்திலும் ஓர் முன்னுதாரணமாகத் திகழ்கின்றார். போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டத்தினைப் பாரமரிப்பதில் இவரின் முழுக் குடும்பமும் உற்சாகத்துடன் ஈடுபடுகின்றது. மேலதிக செலவின்றி நாளாந்தம் போஷாக்குச் செறிந்த உணவு இவர்களுக்குக் கிடைக்கின்றது. மேலும் இவர்களின் வருமானப் பிறப்பாக்கத்தினால் சேமிப்புக்களும் கிடைக்கின்றன.

# குறிப்புகள்


DCS (2016) Household Income and Expenditure Survey, Sri Lanka

Department of Census and Statistics. 2021. Official poverty line by District. [ONLINE] Available: http://www.statistics.gov.lk/#:~:text=The%20district%20official%20poverty%20line,2021%20is%20Rs.5177%2F%2D.&text=Economy%20of%20Sri%20Lanka%20contracted,the%204th%20quarter%20of%202020. [Accessed 29 May 2021].

District Secretariat- Matale (2019), Annual Progress Report

FAO (2010) Guidelines for measuring household and individual dietary diversity

Fathima S L & M Neil Harris (2020) Dietary diversity and food intake of urban pre-school children in North-western Sri Lanka

Perera, T. and Madhujith, T., 2012. The pattern of consumption of fruits and vegetables by undergraduate students: a case study. Tropical Agricultural Research, 23(3).

UNDP (2018). The BIOFIN workbook. Finance for nature. The Biodiversity Finance Initiative. United Nations Development Program: New York